**தலைமைச் செயல்
அலுவலரின் கடிதம்**

# மெல்ல நிலையாக அதிகரித்த உற்பத்திக்கு திரும்புகிறோம்

*7/22/2021 வெளியிடப்பட்டது*

எங்களது பல பிராந்தியங்களில் வானிலை வெப்பமடைந்து வருகிறது, ஆனால் தொடர்ச்சியான மைக்ரோசிப் பற்றாக்குறை காரணமாக வாடிக்கையாளர் வெளியீடுகளில் முன்னர் கணிக்கப்பட்ட அளவுக்கு விரைவாக வாகனத் தொழிலில் உற்பத்தி தேவை அதிகரிக்கவில்லை. ஜூலை தேவை ஜூன் மாதத்தை விட சற்றே குறைவாக இருந்தது, இருப்பினும் மூன்றாம் காலாண்டின் பிற்பகுதியிலும், நான்காவது காலாண்டிலும் விநியோக சவால்கள் தீர்க்கப்பட்டு மேம்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதால், நாங்கள் திட்டமிட்ட உயர்ந்த வெளியீடுகளை எட்டுவோம் என்று எதிர்நோக்குகிறோம். எங்கள் உற்பத்தி குழுக்கள் அதிக தேவைக்காக தயாராகி வரும் அதே நேரத்தில், பிராஜக்டுகள் குறைந்து வேலை அதிகமில்லாததால், பயிற்சி மற்றும் “எரிசக்தி வேட்டை” போன்ற தொடர்ச்சியான மேம்பாட்டு வாய்ப்புகளுக்காக இந்த நேரத்தை பயன்படுத்தி ஆற்றல் சேமிப்புகளைத் தேடுகின்றனர்.

துரதிர்ஷ்டவசமாக, ஜூன் மாதத்தில் பாதுகாப்பு சம்பவங்கள் அதிகரித்ததைக் கண்டோம். நிறுவனம் இன்னும் எங்கள் உலகத்தரம் வாய்ந்த இலக்கை தாண்டியே செயல்படுகிறது, ஆனால் பாதுகாப்பில் எங்கள் கவனம் ஒருபோதும் அசையாமல் அதை எங்கள் முன்னுரிமையாக வைத்திருப்பது முக்கியம். பெரும்பாலான பிராந்தியங்களில் COVID வழக்குகள் தொடர்ந்து குறைவதையும், அதிகரித்த தடுப்பூசி விகிதங்களையும் காண்பது ஊக்கமளிக்கிறது. ஜூலை 9ஆம் தேதி நிலவரப்படி, நிறுவனத்தில் COVID-19-ஆல் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் மொத்தம் 30 பேர் இருந்தனர். இது ஆகஸ்ட் 2020 இல் வழக்குகளை கண்காணிக்கத் தொடங்கியதிலிருந்து நாங்கள் கண்ட மிகக் குறைந்த நிலை.

நான் முன்னிலைப்படுத்த விரும்பும் மூன்று சமீபத்திய முன்னேற்றங்கள் உள்ளன. முதலாவதாக, எங்கள் வணிகத்திலும், எங்கள் பங்குதாரர்களிடமும் நிலைத்தன்மை தொடர்ந்து அதிக முக்கியத்துவத்தைப் பெறுவதால், நிறுவனம் இதில் செய்யப்படும் நடவடிக்கைகளை தொடர்ந்து உயர்த்துவதற்காக உலகளாவிய நிலைத்தன்மைக் குழுவை சமீபத்தில் நிறுவியது. Cooper Standard எப்போதும் ஒரு நெறிமுறையான மற்றும் பொறுப்பான வழியில் வணிகம் செய்வதற்கு அதிக முன்னுரிமை கொடுத்துள்ளது. இந்த கவுன்சில் சுற்றுச்சூழல், சமூக மற்றும் நிர்வாக தலைப்புகளைச் சுற்றி விரிவான உத்தியை உருவாக்குவதில் கவனம் செலுத்தி, Cooper Standard பல ஆண்டுகளுக்கு ஒரு நிலையான வணிகமாக நீடிப்பதை உறுதிசெய்ய உதவும்.

இரண்டாவதாக, எங்கள் மணிநேர உற்பத்தி சகாக்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் புதிய டிஜிட்டல் தகவல்தொடர்பு கருவியான CS கனெக்டின் அறிமுகம் குறித்து தெரிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். வரலாற்று ரீதியாக, எங்கள் நிறுவனம் மாத-சம்பள பணியாளர்களுடன் மின்னஞ்சல் போன்ற மின்னணு கருவிகள் மூலம் எளிதில் தொடர்பு கொண்டிருக்கிறது. முதன்முறையாக, அனைத்து ஊழியர்களுக்கும் இப்போது மொபைல் அல்லது டெஸ்க்டாப் பயன்பாடு மூலம் தகவல்தொடர்புகளுக்கான அணுகல் கிடைக்கும். ஊழியர்கள் Cooper Standard செய்திகள் மற்றும் அவர்களின் இருப்பிடம் மற்றும் ஆர்வம் தொடர்பாக உள்ள முக்கியமான ஆதாரங்களை நேரடியாக அணுக CS கனெக்ட் அனுமதிக்கும். வரவிருக்கும் வாரங்களில் உங்கள் வசதியில் செய்யப்படும் கூடுதல் புதுப்பிப்புகளை தொடர்ந்து பாருங்கள்.

இறுதியாக, எங்கள் வாடிக்கையாளர்கள் சிறந்த தரத்திற்காக எங்களை தொடர்ந்து அங்கீகரிக்கிறார்கள் என்பதை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். சமீபத்தில், GM வழங்கும் தரத்திற்கான விருது எங்களது 20 இடங்களுக்கு கிடைத்தது, மற்றும் CJLR (செரி ஜாகுவார் லேண்ட் ரோவர்) நிறுவனம் வழங்கும் தரத்திற்கான விருதை எங்களது குன்ஷன் 1 ஆலை பெற்றது. கூடுதலாக, ஜூன் மாதத்தில், எங்கள் IpB-க்கான (ஒரு பில்லியனில் உள்ள தரமான சம்பவங்கள்) முழு ஆண்டு இலக்கையும் வென்றோம். எங்கள் அணியின் சிறப்பான அர்ப்பணிப்புக்கு இது ஒரு சிறப்பான எடுத்துக்காட்டு.

உங்களுடைய தொடர்ச்சியான ஊக்குவிப்பிற்கும் கடின உழைப்பிற்கும் நன்றி!

**ஜெஃப் எட்வார்ட்ஸ்**
தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர்

**விரைவில் வருகிறது!**

**CS CONNECT**

CS கனெக்ட் என்பது Cooper Standard புதிய டிஜிட்டல் பணியாளர் தகவல் தொடர்பு கருவி. உங்கள் இடத்தில் தொடங்கப்படுவதை பற்றிய கூடுதல் விவரங்களுக்காக தொடர்ந்து பாருங்கள்.

**தடுப்பூசிகள் ஊக்குவிக்கப்பட்டன**

COVID-19 நோயால் பாதிக்கப்பட்ட சிலர் வைரஸிலிருந்து மீண்டு வந்த நீண்ட காலத்திற்குப் பிறகும் சோர்வு மற்றும் வாசனை மற்றும் சுவை இழப்பு போன்ற அறிகுறிகளால் பாதிக்கப்படலாம் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தடுப்பூசி போடுவது வைரஸைத் தடுக்க உதவுவது மட்டுமல்லாமல், நீங்கள் தப்பித் தவறி அதனால் பாதிக்கப்பட்டாலும், அது நீடித்த அறிகுறிகளுடன் உங்களை விட்டுச்செல்லும் தீவிரமான வழக்காக மாறாமல் தடுக்கும். நீண்ட-காலமாக COVID-19-இன் நீடித்த அறிகுறிகளைக் கொண்ட சில தடுப்பூசி பெறாத நோயாளிகளுக்கு, தடுப்பூசிக்குப் பிறகு அறிகுறிகளில் நிவாரணம் கிடைத்திருப்பதாக அறிக்கைகள் உள்ளன.

**பின்வரும் நிலைகளில் உங்கள் உள்ளூர் HR துறையைத் தொடர்புகொள்ளவும் மற்றும் பணிக்கு வராதீர்கள்:**

- ஜுரம் (100.4 °F / 38 °C அல்லது அதற்கு மேல் இருந்தால்) அல்லது சளிக்காய்ச்சல் போன்ற அறிகுறிகள் இருந்தால்
- உங்கள் உள்ளூர் சுகாதாரத் துறை அல்லது சுகாதார வழங்குநரால் சுய-தனிப்படுத்தல் அல்லது சுய-தனிமைப்படுத்தலில் இருக்குமாறு அறிவுறுத்தப் பட்டிருக்கிறீர்கள்
- கடந்த 14 நாட்களில் COVID-19 சோதனையில் நேர்மறை முடிவு வந்திருக்கும் அல்லது அதற்காக சோதிக்கப்படும் எவருடனும் நெருங்கிய தொடர்பில் இருந்திருக்கிறீர்கள்

**நெறிமுறை தொடர்பான அறிக்கை அளிக்கும் ஆதார அமைப்புகள்**

- உங்களுடைய மேற்பார்வையாளர் அல்லது மேலாளர்
- மனிதவளக் குழுவின் எந்த உறுப்பினரும்
- சட்டத் துறை அல்லது நெறிமுறைகள் மற்றும் இணக்க அலுவலகம் (ethicsandcompliance@cooperstandard.com)
- உலகளாவிய நெறிமுறைகள் மற்றும் இணக்கக் குழுவின் எந்தவொரு உறுப்பினரும்
- விரும்பினால் அநாமதேயமாக* www.csintegrityline.com இல் Cooper Standard இன்டெக்ரிடிலைனை அணுகவும்
  *நாங்கள் செயல்படும் ஒரு சில நாடுகள் அநாமதேய அறிக்கையிடலை அனுமதிப்பதில்லை என்பதை குறித்துக் கொள்ளவும்.